<u>சாட்சியின் வாக்குமூலம்</u>

<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>

**Trust OS No :458/2024**

**PW 1 – திரு. ஜடராயன் த/பெ.செங்களகிருஷ்ணன்**

**21.01.2026**

<u>சாட்சி சத்திரப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிசெய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**நேரம் 1.20 மணி**

இந்த வழக்கு சொத்திற்கு உரிமையாளர் யார் என்றால் 18 கடை மளிகை வர்த்தகர்கள். 2011 ல் அது மளிகை Merchant Association Trust என பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு சொத்தை எங்கள் trust வாங்கினார்களா என்றால் எங்கள் trust வாங்கவில்லை. வழிமுறையாக வந்த சொத்து. முதன்முதலில் யார் இந்த சொத்தை trust க்கு எழுதி கொடுத்தார் என்றால் 150 வருடங்களாக பராம்பரியமான சொத்து. கிரையமாக பெறப்படவில்லை என்றால் சரிதான். வேறு யாரும் இந்த சொத்தை trust க்கு எழுதி ்கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த சொத்து எப்படி வந்தது என்பதற்கான விளக்கமும் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். காலியாக சொத்தாக வாங்கப்பட்டதா அல்லது எப்படி வந்தது என்று கூறவில்லை என்றால் ஓட்டு வீட்டுடன் இருந்தது. எந்த வருடம் trust க்கு சொத்து கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 2011 க்கு முன்பு trust க்கு சொத்து எவ்வாறு வந்தது என்பது குறித்து trust deed ல் எழுதப்படவில்லை நீதிமன்றத்தில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யபடவில்லை என்றால் அந்த காலத்தில் கொடுத்தற்கான ஆதாரம் இல்லை. இந்த சொத்தில் மின்சார இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. 2011 ற்கு முன்னால் யார் பெயரில் மின்சார இணைப்பு இருந்தது என்றால் ருத்தரப்பா செட்டியார் பெயரில் இருந்தது. அவர் ஒரு அறங்காவலர். அவர் அறங்காவலராக இருந்தார் என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் சமர்பித்துள்ளேனா என்றால் நான் சமர்பிக்க தயாராக உள்ளேன். இந்த சொத்தில் வாடகைக்கு ஒப்பந்தம்

ஏதாவது போடபட்டிருந்ததா என்றால் தெரியாது. எழுத்து மூலமான ஒப்பந்தம் இல்லை. வாய்மொழியாக தான் சொன்னோம். எனக்கு ருத்தரப்ப செட்டியாரை தெரியும். 2011 ல் இந்த சொத்துகளை எங்கள் பெயரில் பத்திரமாக மாற்றம் செய்து கொண்டு மின் இணைப்பு பெற்று சொத்து வரி செலுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. 2011 ற்கு முன்பதாக இந்த Trust இருந்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபடவில்லை என்றால் இல்லை.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.